*கவனிக்க .- 2014.09.19 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1882 - 2014 සැප්තැම්බර් මස 26 වැනි සිකුරාදා - 2014.09.26

*1882 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1078 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1081 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் - வெற்றிடம்

## நாகொட பிரதேச சபை

பதவிகள் - வெற்றிடம்

நாகொட பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாகவுள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்குரிய தகைமைகளைக் கொண்ட நாகொட பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவியின் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | தரம் | மாதாந்த சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | சுகாதார ஊழியர் | 02 | III தேர்ச்சியற்ற | ரூ. 11,730 - 10 × 120 - 10 × 130 - 10 ×145 - 12 × 160 - ரூ. 17,600 பீ. எல். 1-2006ஏ | 8 ஆம் வகுப்பு (9 ஆம் ஆண்டு) சித்தி அடைந்திருத்தல் வேண்டும். |
| 2 | மின்சார தொழில்நுட்ப வியலாளர் | 01 | III அரைத் தேர்ச்சியுள்ள | ரூ. 12,210 - 10 × 130 - 10 × 145 - 10 × 160 - 12 × 170 - ரூ. 18,600 பீ. எல். 2-2006ஏ | க.பொ.த.(சா/த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். பதவியுடன் தொடர்புடைய 3 ஆம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவில் பதவி பெற்ற தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட தொழில் பயிற்சி பற்றிய (N. V. Q.) 2 என்ற மட்டத்தில் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். தொடர்புடைய பதவிக்கு மேலதிக அனுபவமிருந்தால் அது மேலதிக தகைமையாகும். |
| 3 | சாரதி | 03 | III தேர்ச்சியுள்ள | ரூ. 12,470 - 10 × 130 - 10 × 145 - 10 × 160 - 12 × 170 - ரூ. 18,860 பீ. எல். 3-2006ஏ | க.பொ.த.(சா/த.) பரீட்சையில் இரண்டு அமர்வுக்கு மேற்படாது ஏதேனும் 6 பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். சாரதி அனுமதி பத்திரம் பெற்றதன் பின்னர் சாரதியாக 3 வருடங்கள் சேவை செய்த அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அனுமதிப் பத்திரம் மற்றும் அனுபவம் மோட்டார் வாகன போக்கு வரத்து ஆணையாளரால் வழங்கப்பட்ட ஒவ்வொரு பதவிக்கும் உரிய மோட்டார் வாகனம் பிரிவுகளுக்குமான அனுமதிப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும். |

**சேவையில் ஈடுபடுவதற்கான பொது நிபந்தனைகள் :-**

1. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

2. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியாகும்போது சுகாதார ஊழியர் மற்றும் மின்சார தொழில்நுட்பவியலாளர் பதவிகளுக்கு விண்ணப்பம் செய்வோர் தென் மாகாணத்தில் 3 வருட காலம் நிரந்தர வதிவிடமுடையவராய் இருத்தல் வேண்டும். அத்தோடு சாரதிப் பதவிக்கு விண்ணப்பம் செய்வோர் விண்ணப்பம் அனுப்பப்படும்போது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதியாகும்போது விண்ணப்பதாரர்கள் தென் மாகாணத்தில் 5 வருட காலம் நிரந்தர மற்றும் 3 வருட தற்காலிக வதிவிடமுடையவராக இருத்தல் வேண்டும் ;

3. நாகொட பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடமுள்ளவர்கள் தொடர்பாக முன் உரிமை அளிக்கப்படும் ;

4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள ஊழியர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை உரித்தாகாது.) ;

5. விண்ணப்பதாரர்கள் நல்லொழுக்கமும் சிறந்த தேகாரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும் ;

6. நாகொட பிரதேச சபையில் ஏற்கனவே தற்காலிகமாக/ அமைய/ பதில் கடமை/ ஒப்பந்த அடிப்படையில் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன் உரிமை அளிக்கப்படும் ;

7. விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்பட்டதற்கு இடைப்பட்ட கால எல்லைக்குள் ஆட்சேர்த்துக்கொள்வதை தாமதப்படுத்துவதற்கு, மாற்றங்கள் செய்வதற்கு, இந்த அறிவித்தலை இரத்துச் செய்வதற்கான பூரணஉரிமை நாகொட பிரதேச சபையின் தவிசாளருக்கு உண்டு ;

8. தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக காணப்பட்டவராக இருத்தல் கூடாது ;

9. சுகாதார மற்றும் மின்சார தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமைகளைப் பரிசீலனை செய்தும், சாரதிப் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**சேவையில் சேர்த்துக்கொள்வதற்கான நிபந்தனைகள்.-**

(1) இந்தப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள்/அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செலுத்தல் வேண்டும் ;

(2) தெரிவு செய்யப்படுபவர்கள் 3 வருட தகுதிகாண் காலத்துக்கு உட்படுத்தப்படுவார்கள் ;

(3) இந்த ஆட்சேர்ப்பு தொடர்பான நிபந்தனைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக்கோவையின் ஒழுங்கு விதிகளுக்கும், நிதிக்கட்டளைச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கும், தென்மாகாண கௌரவ ஆளுநரின் கட்டளைகளுக்கும், திணைக்களங்களின் கட்டளைகளுக்கும் தென் மாகாண சபையினால் காலத்திற்கு காலம் வெளியிடுகின்ற ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை.-** (1) விண்ணப்பதாரர்கள் இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப A4 அளவிலான தாளின் இருபக்கங்களையும் பயன்படுத்தி தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2014.10.20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "தவிசாளர்", நாகொட பிரதேச சபை, கா/நாகொட என்ற விலாசத்திற்கு கிடைக்கப்பெறும்வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் அடங்கும் கடிதவுறையில் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை முழுமையாக குறிப்பிட வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில், மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தை தாம் சேவைபுரிகின்ற திணைக்களம்/நிறுவனத்தின் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் அல்லது பூர்த்தியற்ற அல்லது சான்றிதழ்களின் பிரதிகள் கிடைக்கப்பெறாத அல்லது உரிய தகைமைகள் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(2) விண்ணப்பப்படிவத்துடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அத்தாட்சிப்பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். மூலப் பிரதிகள் நேர்முகப்பரீட்சையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் :-

(1) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;
(2) கல்விச் சான்றிதழ்கள் ;
(3) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் பிரதேச செயலாளரின் சான்றிதழ் ;
(4) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நன்னடத்தைச் சான்றிதழ்கள் இரண்டு;
(5) தொழில்சார் அனுபவம் பற்றிய சான்றிதழ்.

விலேகே ஹேமசந்திர,
தவிசாளர்,
நாகொட பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
நாகொட,
2014, செத்தெம்பர் 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நாகொட பிரதேச சபை ................................ பதவி**

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
(ஆ) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் :-----.
2. நிரந்தர வதிவிட மாவட்டம் :-----.
3. நிரந்தர வதிவிட முகவரி :-----.
4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :-----.
5. பால் : (ஆண்/பெண்) :-----.
6. பிறந்த திகதி :-
ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.
7. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் வயது :
வருடங்கள் :----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.
8. திருமணமானவரா/திருமணமாகாதவரா? :-----.

9. தேசிய இனம் :-----.
10. இலங்கை பிரசையா? அவ்வாறாயின், பிறப்பினாலா? அல்லது பதிவினாலா? :-----.
11. கல்வித் தகைமைகள் :-----.
12. வேறு தகைமைகள் :-----.

இந்த விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றதும் என உறுதிமொழிகிறேன். மேலே குறிப்பிடப்படும் தகவல்கள் பிழையானதென நிரூபிக்கப்பட்டால் நான் சேவைக்கு தேர்ந்தெடுக்கப்பட முன்னர் தகுதியற்றவராவேன் என்பதையும், நியமனம் பெற்ற பின்னர் நிரூபிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**ஏற்கனவே அரச வேலையில் /மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கான திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரியான திரு. / திருமதி/ செல்வி ............................................................................................................. இந்த நிறுவனத்தில் ........................................................................... ஆக சேவை புரிகின்றார். இவர் எந்தவொரு தண்டனைக்கு உட்படுத்தப்படாதவர் என உறுதிப்படுத்துவதோடு இந்தப் பதவிக்காக இவர் தெரிவு செய்யப்பட்டால் இவரை விடுவிக்க முடியும்/ முடியாது என்பதுடன் இந்த விண்ணப்பத்தை சிபாரிசு செய்து விண்ணப்பிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திணைக்களம்/ நிறுவனம் :----.
பெயர் :----.
பதவி :----.
பதவி முத்திரை :----.
திகதி :----.

9-1143

---

திருத்தம்

**தம்புள்ள மாநகர சபை**

2014, செத்தெம்பர் 19 ஆந் திகதிய 1881 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி அறிவித்தலில், இலக்கம் 9-642 இன் கீழ் தம்புள்ள மாநகர சபையினால் பதவிகள் வெற்றிடம் தொடர்பில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் "விண்ணப்ப முடிவுத் திகதியானது 2014.09.26" என அறிவிக்கப்பட்டிருந்த போதும் அது -

"விண்ணப்ப முடிவுத் திகதி 2014.10.20" என திருத்தி வாசிக்கப்பட வேண்டும்".

அமில நவரத்ன,
மாநகர ஆணையாளர்,
தம்புள்ள.

மாநகர சபை,
தம்புள்ள,
2014, செத்தெம்பர் 11.

9-1189

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## ராஜாங்கனை பிரதேச சபை

ராஜாங்கனை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட விளையாட்டு மைதானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 108 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய 2013.09.26 ஆந் திகதி நடைபெற்ற பிரதேச சபை கூட்டத்தில் முன்மொழியப்பட்ட பிரேரணைகளின்படி பொது உபயோகத்தின் கீழ் ராஜாங்கனை விளையாட்டு மைதானம் தொடர்பாக கீழ்வரும் தீர்மானம் எடுக்கப்பட்டது என இத்தால் அறியத்தருகின்றேன்.

ஜி. எச். சரத் காமினி,
தவிசாளர்,
ராஜாங்கனை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ராஜாங்கனை,
2014, செத்தெம்பர் 03.

1. ராஜாங்கனை 16 ஆம் பிரிவு விளையாட்டு மைதானம் - ரன்தரு விளையாட்டு மைதானம்

| | |
|---|---|
| வடக்கு | : கே. ஏ. அநுர குமாரியின் காணி; |
| தெற்கு | : கால்வாயுடன் கூடிய பாதை அரச நிலம் ; |
| கிழக்கு | : என். ஜி. நிலன்தயின் காணி ; |
| மேற்கு | : எச். பி. பிரசான்தயின் காணி, |
| விஸ்தீரணம் | : 3 ஏக்கர். |

2. ராஜாங்கனை 16 ஆம் பிரிவு நாமல் செவனகம விளையாட்டு மைதானம்

| | |
|---|---|
| வடக்கு | : சமன் குமார திஸாநாயக்க, விஜேரத்ன ஆகியோர்களின் காணி; |
| தெற்கு | : பிரஜா மண்டபம்; |
| கிழக்கு | : அரச விவசாய நிலம்; |
| மேற்கு | : அரச வீதி, |
| விஸ்தீரணம் | : 1 ஏக்கர். |

3. ராஜாங்கனை 15 ஆம் பிரிவு விமுக்தி விளையாட்டு மைதானம்

| | |
|---|---|
| வடக்கு | : அரச வீதி ; |
| தெற்கு | : அரச வீதி ; |
| கிழக்கு | : அரச வீதி ; |
| மேற்கு | : அரச வீதி, |
| விஸ்தீரணம் | : 1 ஏக்கர். |

4. ராஜாங்கனை 06 ஆம் பிரிவு தியவர கம்மான விளையாட்டு மைதானம்

| | |
|---|---|
| வடக்கு | : அநுர பண்டா அவர்களின் காணி ; |
| தெற்கு | : அரச வீதி ; |
| கிழக்கு | : அரச வீதி ; |
| மேற்கு | : அரச வீதி, |
| விஸ்தீரணம் | : 2 ஏக்கர். |

5. ராஜாங்கனை 14 ஆம் பிரிவு விளையாட்டு மைதானம்

| | |
|---|---|
| வடக்கு | : அரச வீதி ; |
| தெற்கு | : டபிள்யு. லீலாரத்னாவின் காணி; |
| கிழக்கு | : அரச வீதி ; |
| மேற்கு | : சுனில் ஆனந்த மற்றும் எம். பி. ஸ்டிவனின் காணி, |
| விஸ்தீரணம் | : 1/2 ஏக்கர். |

6. ராஜாங்கனை 13 ஆம் பிரிவு சுசரித மரண நலன்புரி சங்கத்திற்கு அருகிலுள்ள விளையாட்டு மைதானம் சுது பரவி விளையாட்டுக்கழகம்

| | |
|---|---|
| வடக்கு | : அரச வீதி; |
| தெற்கு | : அரச வீதி; |
| கிழக்கு | : அரச வீதி; |
| மேற்கு | : சாதா அவர்களின் காணி, |
| விஸ்தீரணம் | : 2 ஏக்கர். |

7. ராஜாங்கனை 13 ஆம் பிரிவு விளையாட்டு மைதானம் ஜயசிகுரு விளையாட்டு கழகம்

| | |
|---|---|
| வடக்கு | : அரச வீதி ; |
| தெற்கு | : ஜஸ்டின் மற்றும் நிகால் அவர்களின் காணி; |
| கிழக்கு | : அரச வீதி ; |
| மேற்கு | : அரச வீதி, |
| விஸ்தீரணம் | : 2 ஏக்கர். |

8. ராஜாங்கனை 11 ஆம் பிரிவு புபுது விளையாட்டு மைதானம்

| | |
|---|---|
| வடக்கு | : லால் அவர்களின் காணி ; |
| தெற்கு | : அரச வீதி ; |
| கிழக்கு | : டி. சி. கே. லியனகேயின் காணி; |
| மேற்கு | : அரச வீதி, |
| விஸ்தீரணம் | : 1/2 ஏக்கர். |

9. ராஜாங்கனை 04 ஆம் பிரிவு விளையாட்டு மைதானம்

| | | |
|---|---|---|
| வடக்கு | : | ராஜு, சான்த, அஜித் அவர்களின் காணி ; |
| தெற்கு | : | அரச வீதி; |
| கிழக்கு | : | அரச வீதி; |
| மேற்கு | : | அரச வீதி, |
| விஸ்தீரணம் | : | 7 ஏக்கர். |

10. ராஜாங்கனை நவகம்மான விளையாட்டு மைதானம்

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச வீதி; |
| தெற்கு | : | அரச வீதி; |
| கிழக்கு | : | ஞானதாச மற்றும் சந்திரபால ஆகியோர்களின் காணி; |
| மேற்கு | : | அரச வீதி, |
| விஸ்தீரணம் | : | 2 ஏக்கர். |

11. ராஜாங்கனை கமுந்தேகம விளையாட்டு மைதானம் எவரஸ்ட் விளையாட்டு கழகம்

| | | |
|---|---|---|
| வடக்கு | : | ஆனந்த விஜேசிங்க அவர்களின் காணி ; |
| தெற்கு | : | அரச வீதி; |
| கிழக்கு | : | அரச வீதி; |
| மேற்கு | : | வில்சன் அவர்களின் காணி, |
| விஸ்தீரணம் | : | 2 ஏக்கர். |

12. ராஜாங்கனை சிறிமாபுற விளையாட்டு மைதானம்

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச வீதி; |
| தெற்கு | : | அரச வீதி; |
| கிழக்கு | : | அரச வீதி; |
| மேற்கு | : | அரச கால்வாய், |
| விஸ்தீரணம் | : | 2 ஏக்கர். |

13. ராஜாங்கனை நவசிறிகம விளையாட்டு மைதானம் ரன்தரு விளையாட்டு கழகம்

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச வீதி; |
| தெற்கு | : | எச். எம். சோமாவதி அவர்களின் காணி; |
| கிழக்கு | : | ஹியுபட் அவர்களின் காணி; |
| மேற்கு | : | ஞானவதி அவர்களின் காணி, |
| விஸ்தீரணம் | : | 2 ஏக்கர். |

14. ராஜாங்கனை 2 ஆம் பிரிவு விளையாட்டு மைதானம் ரதுரோச விளையாட்டு கழகம்

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச வீதி; |
| தெற்கு | : | அரச வீதி; |
| கிழக்கு | : | அரச வீதி; |
| மேற்கு | : | வியனகே தேமிஸ் சிஞ்ஞோ அவர்களின் காணி, |
| விஸ்தீரணம் | : | 2 ஏக்கர். |

15. ராஜாங்கனை 18 ஆம் பிரிவு ஆராமய அருகில் விளையாட்டு மைதானம்

| | | |
|---|---|---|
| வடக்கு | : | ஆராமய அமைந்துள்ள காணி ; |
| தெற்கு | : | அரச வீதி; |
| கிழக்கு | : | அரச வீதி; |
| மேற்கு | : | வெற்று காணி, |
| விஸ்தீரணம் | : | 2 ஏக்கர். |

16. சிறிமாபுற கரப்பந்தாட்ட மைதானம்

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச வீதி ; |
| தெற்கு | : | மக்கள் மன்றம்; |
| கிழக்கு | : | வெற்று காணி; |
| மேற்கு | : | அரச வீதி, |
| விஸ்தீரணம் | : | 1/2 ஏக்கர். |

17. 8 ஆம் பிரிவு ஆராமய அருகில் விளையாட்டு மைதானம்

| | | |
|---|---|---|
| வடக்கு | : | வெற்று காணி; |
| தெற்கு | : | பாடசாலை விளையாட்டு மைதானம்; |
| கிழக்கு | : | பாடசாலை விளையாட்டு மைதானம்; |
| மேற்கு | : | அரச வீதி, |
| விஸ்தீரணம் | : | 2 ஏக்கர். |

9-782

---

## ராஜாங்கனை பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 127 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய சுடுகாடு மற்றும் புதைகுழி சட்டப்பிரகாரம் 3 ஆம் பிரிவின் கீழ் ராஜாங்கனை பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 2013.09.26 ஆந் திகதி நடைபெற்ற பிரதேச சபை கூட்டத்தில் முன்மொழியப்பட்ட பிரேரணைகளின்படி கீழ்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டது என இத்தால் அறியத்தருகின்றேன்.

ஜி. எச். சரத் காமினி,
தவிசாளர்,
ராஜாங்கனை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ராஜாங்கனை,
2014, செத்தெம்பர் 03.

**சுடுகாட்டினை மீளப்பெற்றுக்கொள்ளும் ஆலோசனை**

ராஜாங்கனை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமையப்பெற்றுள்ள கீழ்வரும் சுடுகாடுகள் ராஜாங்கனை பிரதேச சபைக்கு மீளப்பெறல் தொடர்பாக எதிர்ப்பதற்கான காரணம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதி முதல் 14 நாட்களுக்குள் எனக்கு முன்வைப்பதற்கு அதிகாரம் உள்ளதோடு அக்காலத்திற்குள் எதிர்ப்புகள் ஏதும் இல்லாதிருப்பின் அச்சுடுகாடு பிரதேச சபைக்கான சுடுகாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நிருவகிக்கப்படும் எனவும் பொதுமக்கள் தெரிந்துகொள்வதற்காக இத்தால் அறியத்தருகின்றேன்.

ராஜாங்கனை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் உள்ள சுடுகாடுகள்

1. ராஜாங்கனை 18 ஆம் பிரிவு சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | இல. 318, 317, 316 காணித்துண்டுகள் ; |
| தெற்கு | : | இல. 376 காணி ; |
| கிழக்கு | : | இல. 874 காணி ; |
| மேற்கு | : | இல. 374 பனாங்காணி வாய்க்கால் |
| விஸ்தீரணம் | : | 2 ஏக்கர். |

2. ராஜாங்கனை 17 ஆம் பிரிவு சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | ஹேமஸ்ரீ மற்றும் கபில ரத்னாயக்க அவர்களின் காணி; |
| தெற்கு | : | ஆர். எம். உபாலி ரத்னாயக்க அவர்களின் காணி ; |
| கிழக்கு | : | அரச காணி ; |
| மேற்கு | : | தம்மன்னா வாவி |
| விஸ்தீரணம் | : | 2 ஏக்கர். |

3. ராஜாங்கனை 16 ஆம் பிரிவு சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச காணி ; |
| தெற்கு | : | சூலனி அவர்களின் காணி ; |
| கிழக்கு | : | டி. வி. தர்மதாச அவர்களின் காணி ; |
| மேற்கு | : | தர்சன அவர்களின் காணி |
| விஸ்தீரணம் | : | 1/2 ஏக்கர். |

4. ராஜாங்கனை 15 ஆம் பிரிவு சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச காணி ; |
| தெற்கு | : | அரச காணி ; |
| கிழக்கு | : | ஆர். எம். எஸ். உதேசிகா அவர்களின் காணி ; |
| மேற்கு | : | எல். சந்திரபால அவர்களின் காணி |
| விஸ்தீரணம் | : | 5 ஏக்கர். |

5. ராஜாங்கனை 15 ஆம் பிரிவு சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச காணி ; |
| தெற்கு | : | லலித் ஆனந்த அவர்களின் காணி; |
| கிழக்கு | : | குஸலா அவர்களின் காணி ; |
| மேற்கு | : | அரச காணி |
| விஸ்தீரணம் | : | 1 ஏக்கர். |

6. ராஜாங்கனை 7 ஆம் பிரிவு சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச காணி ; |
| தெற்கு | : | அரச வீதி; |
| கிழக்கு | : | குப்பை வாய்க்கால் ; |
| மேற்கு | : | மரண நலன்புரி சங்கம் |
| விஸ்தீரணம் | : | 3 ஏக்கர். |

7. ராஜாங்கனை 6 ஆம் பிரிவு சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | விஜய அவர்களின் காணி ; |
| தெற்கு | : | டி. எம். ஆரியரத்ன பண்டார அவர்களின் காணி; |
| கிழக்கு | : | அரச வீதி ; |
| மேற்கு | : | படுகுனே அவர்களின் காணி |
| விஸ்தீரணம் | : | 1 ஏக்கர். |

8. ராஜாங்கனை 14 ஆம் பிரிவு சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | கே. ரணசிங்க மற்றும் பிரேமதாஸ அவர்களின் காணி ; |
| தெற்கு | : | எச். கே. மல்லிகா அவர்களின் காணி; |
| கிழக்கு | : | எச். கே. மல்லிகா அவர்களின் காணி ; |
| மேற்கு | : | பியஸ்ரீ சமன் அவர்களின் காணி |
| விஸ்தீரணம் | : | 1 ஏக்கர். |

9. ராஜாங்கனை 13 ஆம் பிரிவு சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | பல்நோக்கு கட்டடம் மற்றும் இந்திகா அவர்களின் காணி ; |
| தெற்கு | : | அரச காணி; |
| கிழக்கு | : | அரச காணி; |
| மேற்கு | : | ஜி. பி. எஸ். அரச வீதி |
| விஸ்தீரணம் | : | 2 ஏக்கர். |

10. ராஜாங்கனை 10 ஆம் பிரிவு சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | றுகுனு மரண நலன்புரி சங்கம்; |
| தெற்கு | : | எச். பி. மல்லிகா குணசீலி அவர்களின்; |
| கிழக்கு | : | கமல் அவர்களின் காணி; |
| மேற்கு | : | அரச வீதி |
| விஸ்தீரணம் | : | 142 ஏக்கர். |

11. ராஜாங்கனை 09 ஆம் பிரிவு சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | ஜி. பி. எஸ். பழைய அரச வீதி ; |
| தெற்கு | : | சூலே முதலாளி, யு. செனவிரத்ன அவர்களின் காணி; |
| கிழக்கு | : | 9 ஆம் பிரிவு விகாரை ; |
| மேற்கு | : | எச். எம். மல்லிகா அவர்களின் காணி |
| விஸ்தீரணம் | : | 5 ஏக்கர். |

12. ராஜாங்கனை 11 ஆம் பிரிவு சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | வயல் வாய்க்கால் அரச காணி ; |
| தெற்கு | : | அரச காணி; |
| கிழக்கு | : | சூரடியா வாவி கால்வாய் ; |
| மேற்கு | : | அரச வீதி |
| விஸ்தீரணம் | : | 7 ஏக்கர். |

13. ராஜாங்கனை 8 ஆம் பிரிவு சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | குப்பை வாய்க்கால்; |
| தெற்கு | : | மைத்ரி ரத்ன மற்றும் டபிள்யூ. ஜி. ஜயசேன அவர்களின் காணி; |
| கிழக்கு | : | அரச குப்பை வாய்க்கால் ; |
| மேற்கு | : | அரச குப்பை வாய்க்கால் |
| விஸ்தீரணம் | : | 6 ஏக்கர். |

14. ராஜாங்கனை 4 ஆம் பிரிவு சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அனுலா அவர்களின் வீடு மற்றும் அரச கால்வாய் ; |
| தெற்கு | : | அரச வீதி; |
| கிழக்கு | : | அரச வீதி; |
| மேற்கு | : | தர்மே அவர்களின் காணி ; |
| விஸ்தீரணம் | : | 1 ஏக்கர். |

15. ராஜாங்கனை 5 ஆம் பிரிவு சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | எம். எச். சந்திரசேன திஸேரா அவர்களின் காணி ; |
| தெற்கு | : | அரச வீதி; |
| கிழக்கு | : | டபிள்யூ. எச். சுமித் சுசன்த அவர்களின் காணி ; |
| மேற்கு | : | அரச வீதி ; |
| விஸ்தீரணம் | : | 2 ஏக்கர். |

16. ராஜாங்கனை நவகம்மான சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச வயல் காணி ; |
| தெற்கு | : | அரச வீதி; |
| கிழக்கு | : | அரச வீதி; |
| மேற்கு | : | அரச வாய்க்கால் ; |
| விஸ்தீரணம் | : | 2 ஏக்கர். |

17. ராஜாங்கனை கழுந்தேகம சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச வாய்க்கால்; |
| தெற்கு | : | அரச வீதி; |
| கிழக்கு | : | அரச வீதி; |
| மேற்கு | : | அரச வீதி ; |
| விஸ்தீரணம் | : | 2 ஏக்கர். |

18. ராஜாங்கனை ஸ்ரீமாபுர சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச வயல் காணி ; |
| தெற்கு | : | அரச வயல் காணி ; |
| கிழக்கு | : | சனீ அவர்களின் காணி; |
| மேற்கு | : | அரச வீதி ; |
| விஸ்தீரணம் | : | 2 ஏக்கர். |

19. ராஜாங்கனை 2 ஆம் பிரிவு சுடுகாடு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அரச வீதி; |
| தெற்கு | : | கருணா அவர்களின் காணி; |
| கிழக்கு | : | அரச வீதி; |
| மேற்கு | : | 1ஆம் பிரிவு அரச வயல் காணி |
| விஸ்தீரணம் | : | 2 ஏக்கர். |

9-783

## ஏறாவூர் பற்று பிரதேச சபை

ஏறாவூர் பற்று பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கீழ் குறிப்பிடப்படும் பிரதேசங்களை அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களாக பிரகடனப்படுத்தல்

1987 ஆம் ஆண்டின 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 134 (1) ஆம் பிரிவின் பிரகாரம் ஏறாவூர்பற்று பிரதேச சபை எல்லையினுள் அமைந்துள்ளதும் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதுமான கிராமங்களை அபிவிருத்தி அடைந்த கிராமங்களாக பிரகடனப்படுத்துவதற்கென 2004.06.17 ஆந் திகதி நடைபெற்ற 43 ஆவது சபைக்கூட்டத்தில் 347 ஆவது தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இது தொடர்பாக 2006.10.05 ஆந் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்டு அதற்கு பதிலாக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் மீள் பிரசுரிக்கப்படுகின்றது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| கிராமம் | கிராம அலுவலர் பிரிவு | கி. சே. பி. இலக்கம் |
|---|---|---|
| சித்தாண்டி | 1. சித்தாண்டி - 02 | 201/1 |
| | 2. சித்தாண்டி - 01 | 201/4 |
| வந்தாறுமூலை | 1. வந்தாறுமூலை கிழக்கு | 197 |
| | 2. வந்தாறுமூலை மேற்கு | 197B |
| கொம்மாதுறை | 1. கொம்மாதுறை வடக்கு | 195B |
| | 2. கொம்மாதுறை கிழக்கு | 196B |
| | 3. கொம்மாதுறை மேற்கு | 196A |
| செங்கலடி | 1. செங்கலடி-01 | 195/1 |
| | 2. செங்கலடி | 195 |
| ஆறுமுகத்தான் குடியிருப்பு | 1. ஆறுமுகத்தான் குடியிருப்பு | 189 |
| | 2. ஆறுமுகத்தான் குடியிருப்பு | 189C |
| குமாரவேலியர் கிராமம் | குமாரவேலியர் கிராமம் | 195B |
| ஐயங்கேணி (முஸ்லிம்) | ஐயங்கேணி (முஸ்லிம்) | 193D |
| மீராகேணி | மீராகேணி | 193E |
| மிச்நகர் | மிச்நகர் | 193B |
| ஏறாவூர்-1 | ஏறாவூர்-1 | 190 |
| தன்னாமுனை | தன்னாமுனை | 189A |

உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
மட்டக்களப்பு.

9-864

---

## வத்தளை - மாபோலை நகர சபை

அறிவித்தல்

வத்தளை - மாபோலை நகர சபையின் அதிகாரத்தில் செயற்படும் அச்சொல்லப்பட்ட நகர சபையின் அதிகார பிரதேசத்திற்குள் அமைந்துள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வீதிகள் பொதுவீதிகள் என அங்கீகரிப்பதற்கு 25.07.2014 மற்றும் 25.08.2014 ஆகிய திகதிகளில் நடைபெற்ற வத்தளை-மாபோலை நகர சபையின் பொது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் இவ்வீதிகள் நிரல் பிரசுரிக்கப்பட்டு மூன்று மாதத்திற்குள் பதிவுத்தபால் மூலம் உரிய எதிர்ப்பை

எனக்கு சமர்ப்பிக்குமாறு மேலும் தெரிவிப்பதுடன் எதிர்ப்பை சமர்ப்பிக்காவிடின், உரிய வீதிகள் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வீதிகளும் சபைக்குரிய பொது வீதிகளாக கருதப்பட்டு செயற்படும் என மேலும் தெரிவிக்கின்றேன்.

ஏ. எச். எம். நௌசாத்,
தலைவர்,
வத்தளை-மாபோலை நகர சபை.

நகர சபை அலுவலகம்,
வத்தளை மாபோலை.

**வத்தளை-மாபோலை நகர சபையினால் பொதுவான வீதிகள் என அறியப்படுகின்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வீதிகள்**

**வத்தளை-மாபோலை நகர சபைக்குரிய வீதிகள் என பகிரங்கமாக அறிவிக்கப்படுகின்றது.**

| இலக்கம் | வீதியின் பெயர் | நிலைமை | | வீதியின் | | நில அளவை யாளரின் பெயர் | வரைபடத்தின் இலக்கம் மற்றும் திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆரம்பம் | முடிவு | நீளம் | அகலம் | | |
| 1. | துண்டு இல. 48 வீதி துண்டு இல. 44 வீதி | வீதி (வீ.அ.அ.ச.) | துண்டு இலக் கங்கள் 47, 41, 50, 43, 45 | 86.5 மீ. 83.5மீ. 84.0மீ. | 3.75மீ. 6.5மீ. 3.25மீ. | எஸ். ஜீ. குணதிலக்க | 512000 வலய இல. 01 31.07.2012 |
| 2. | துண்டு இல. 80 வீதி | துண்டு இல. 48 வீதி | துண்டு இல. 87 | 64.0 மீ. | 3.75மீ. | எஸ். ஜீ. குணதிலக்க | 512000 வலய இல. 01 31.07.2012 |
| 3. | துண்டு இல. 59 வீதி | துண்டு இல. 48 வீதி | துண்டு இல. 61, 53 | 34.5 மீ. | 3.0மீ. | எஸ். ஜீ. குணதிலக்க | 512000 வலய இல. 01 31.07.2012 |
| 4. | துண்டு இல. 17 வீதி | வீதி (வீ.அ.அ.ச.) | துண்டு இல. 19 | 15.5 மீ. 20.0மீ. | 3.5மீ. 3.0மீ. | எஸ். ஜீ. குணதிலக்க | 512000 வலய இல. 01 31.07.2012 |
| 5. | துண்டு இல. 11 வீதி | வீதி (வீ.அ.அ.ச.) | துண்டு இல. 12, 3 | 70.0 மீ. 54.5மீ. | 6.0மீ. 7.0மீ. | எஸ். ஜீ. குணதிலக்க | 512000 வலய இல. 01 31.07.2012 |
| 6. | துண்டு இல. 26 வீதி துண்டு இல. 22 வீதி | துண்டு இல. 407-வீதி (வீ.அ.அ.ச.) | துண்டு இல. 16, 24, 25 | 162.5 மீ. 17.0மீ. | 6.0மீ. 3.0மீ. | கே. எம். சாரதா ஹேவாமான்னகே | 512000 வலய இல. 01 31.07.2012 |
| 7. | துண்டு இல. 406 வீதி | துண்டு இல. 407-வீதி (வீ.அ.அ.ச.) | துண்டு இல. 39 | 122.0 மீ. | 3.0மீ. | கே. எம். சாரதா ஹேவாமான்னகே | 512000 வலய இல. 01 31.07.2012 |

| இலக்கம் | வீதியின் பெயர் | நிலைமை ஆரம்பம் | நிலைமை முடிவு | வீதியின் நீளம் | வீதியின் அகலம் | நில அளவை யாளரின் பெயர் | வரைபடத்தின் இலக்கம் மற்றும் திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| 8. | துண்டு இல. 50 - வீதி, துண்டு இல. 57-வீதி | துண்டு இல. 407-வீதி (வீ.அ.அ.ச.) | துண்டு இல. 49, 54, 59, 60, 61 | 124.5மீ. 43.0மீ. | 3.25மீ. 3.0மீ. | கே. எம். சாரதா ஹேவாமான்னகே | 512000 வலய இல. 01 31.07.2012 |
| 9. | துண்டு இல. 66-வீதி, துண்டு இல. 73- வீதி | துண்டு இல. 407-வீதி (வீ.அ.அ.ச.) | துண்டு இலக்கங்கள் 76, 72 | 39.0மீ. 21.5மீ. | 3.25மீ. 2.50மீ. | கே. எம். சாரதா ஹேவாமான்னகே | 512000 வலய இல. 01 31.07.2012 |
| 10. | துண்டு இல. 173 - வீதி | துண்டு இல. 234-புகை யிரத நிலைய வீதி | துண்டு இல. 174, 172 | 28.0மீ. 30.0மீ. | 3.75மீ. 3.0மீ. | கே. எம். சாரதா ஹேவாமான்னகே | 512000 வலய இல. 01 31.07.2012 |
| 11. | துண்டு இல. 84-சீவலி ஒழுங்கை | துண்டு இல. 234-புகை யிரத நிலைய வீதி | துண்டு இல. 79 | 215.5மீ. | 4.0மீ. | கே. எம். சாரதா ஹேவாமான்னகே | 512000 வலய இல. 01 31.07.2012 |
| 12. | துண்டு இல. 103 - வீதி | துண்டு இல. 84- சீவலி ஒழுங்கை | துண்டு இல. 107, 111 | 66.0மீ. 13.5மீ. | 3.0மீ. 1.75மீ. | கே. எம். சாரதா ஹேவாமான்னகே | 512000 வலய இல. 01 31.07.2012 |
| 13. | துண்டு இல. 202 - வீதி | துண்டு இல. 407- வீதி (வீ.அ.அ.ச.) | துண்டு இல. 201 | 43.0மீ. | 3.25மீ. | கே. எம். சாரதா ஹேவாமான்னகே | 512000 வலய இல. 01 31.07.2012 |
| 14. | துண்டு இல. 177- வீதி | துண்டு இல. 84- சீவலி ஒழுங்கை | துண்டு இல. 176 | 72.0மீ. | 4.0மீ. | கே. எம். சாரதா ஹேவாமான்னகே | 512000 வலய இல. 01 31.07.2012 |
| 15. | துண்டு இல. 113 - வீதி | துண்டு இல. 84- சீவலி ஒழுங்கை | துண்டு இல. 112, 116, 115 | 23.5மீ. 4.5மீ. 13.5மீ. | 4.5மீ. 3.5மீ. 3.0மீ. | கே. எம். சாரதா ஹேவாமான்னகே | 512000 வலய இல. 01 31.07.2012 |
| 16. | துண்டு இல. 91 - வீதி | துண்டு இல. 84- சீவலி ஒழுங்கை | துண்டு இல. 88 | 45.0மீ. 31.5மீ. | 3.5மீ. 3.0மீ. | கே. எம். சாரதா ஹேவாமான்னகே | 512000 வலய இல. 02 04.11.2012 |
| 17. | துண்டு இல. 163 - வீதி | துண்டு இல. 234- புகையிரத நிலைய வீதி | துண்டு இல. 119 | 79.75மீ. | 6.0மீ. | கே. எம். சாரதா ஹேவாமான்னகே | 512000 வலய இல. 02 04.11.2012 |

| இலக்கம் | வீதியின் பெயர் | நிலைமை ஆரம்பம் | நிலைமை முடிவு | வீதியின் நீளம் | வீதியின் அகலம் | நில அளவை யாளரின் பெயர் | வரைபடத்தின் இலக்கம் மற்றும் திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| 18. | துண்டு இல. 158 - சுகாதார இடம் | துண்டு இல. 234- புகையிரத நிலைய வீதி | துண்டு இல. 120 | 64.5மீ. | 3.0மீ. | கே. எம். சாரதா ஹேவாமான்னகே | 512000 வலய இல. 02 04.11.2012 |
| 19. | துண்டு இல. 147- வீதி | துண்டு இல. 234- புகையிரத நிலைய வீதி | துண்டு இல. 148, 146 | 84.75மீ. 16.0மீ. | 3.5மீ. 3.0மீ. | கே. எம். சாரதா ஹேவாமான்னகே | 512000 வலய இல. 02 04.11.2012 |
| 20. | துண்டு இல. 138- மார்க் பெர்ணான்டோ இடம் | துண்டு இல. 234- புகையிரத நிலைய வீதி | துண்டு இல. 124, 129 | 150.5மீ. | 4.5மீ. | கே. எம். சாரதா ஹேவாமான்னகே | 512000 வலய இல. 02 04.11.2012 |
| 21. | துண்டு இல. 249- ஜயவர்தன பூங்கா ஒழுங்கை | துண்டு இல. 234- புகையிரத நிலைய வீதி | துண்டு இல. 303 | 111.0மீ. 20.0மீ. | 6.0மீ. 4.0மீ. | கே. எம். சாரதா ஹேவாமான்னகே | 512000 வலய இல. 02 04.11.2012 |
| 22. | குடாஏதண்ட வீதி | துண்டு இல. 408 வீதி (வீ.அ.அ.ச.) | துண்டு இல. 234- புகையிரத நிலைய வீதி | 292.0மீ. 193.5மீ. 89.0மீ. | 5.0மீ. 4.0மீ. 3.5மீ. | கே. எம். சாரதா ஹேவாமான்னகே | 512000 வலய இல. 02 04.11.2012 |
| 23. | துண்டு இல. 318, துண்டு இல. 342 - புனித அந்தோனியார் வீதி | துண்டு இல. 408 - வீதி (வீ.அ.அ.ச.) | குடாஏதண்ட வீதி | 225.5மீ. 64.0மீ. 31.0மீ. | 6.0மீ. 3.0மீ. 2.5மீ. | கே. எம். சாரதா ஹேவாமான்னகே | 512000 வலய இல. 02 04.11.2012 |
| 24. | துண்டு இல. 295- புனித அந்தோனியார் வீதி, 1 ஆம் குறுக்கு வீதி | துண்டு இல. 318 - புனித அந்தோனி யார் வீதி | துண்டு இல. 294 | 19.5மீ. 46.0மீ. 87.0மீ. | 3.5மீ. 6.0மீ. 4.5மீ. 3.0மீ. | கே. எம். சாரதா ஹேவாமான்னகே | 512000 வலய இல. 02 04.11.2012 |
| 25. | துண்டு இல. 378 - புனித அந்தோனியார் வீதி, 2 ஆம் குறுக்கு வீதி | துண்டு இல. 318 - புனித அந்தோனி யார் வீதி | துண்டு இல. 367 | 63.0மீ. 49.5மீ. | 6.5மீ. 5.5மீ. | கே. எம். சாரதா ஹேவாமான்னகே | 512000 வலய இல. 02 04.11.2012 |
| 26. | துண்டு இல. 34 - ஹெரிசன் ஒழுங்கை | துண்டு இல. 56 - வீதி (வீ.அ.அ.ச.) | துண்டு இல. 149, களுஓய துண்டு இல. 39 | 115.0மீ. 13.5மீ. | 4.5மீ. 2.25மீ. | பீ. டி. கே. தமயந்தி | 512000 வலய இல. 03 21.10.2012 |

| இலக்கம் | வீதியின் பெயர் | நிலைமை<br>ஆரம்பம் | <br>முடிவு | வீதியின்<br>நீளம் | <br>அகலம் | நில அளவை யாளரின் பெயர் | வரைபடத்தின் இலக்கம் மற்றும் திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| 27. | துண்டு இல. 150 - அல்விஸ் டவுன் வீதி | துண்டு இல. 56 - வீதி (வீ.அ.அ.ச.) | துண்டு இல. 149, களுஓய | 148.0மீ. | 7.5மீ. | பீ. டி. கே. தமயந்தி | 512000 வலய + இல. 03 21.10.2012 |
| 28. | துண்டு இல. 51 - வீதி | துண்டு இல. 56 - வீதி (வீ.அ.அ.ச.) | துண்டு இல. 50, 52 | 69.5மீ. | 3.0மீ. | பீ. டி. கே. தமயந்தி | 512000 வலய இல. 03 21.10.2012 |
| 29. | துண்டு இல. 115 - குடாஏதண்ட வீதி, கல்கந்த வீதி | குடாஏதண்ட பிரதான வீதி | துண்டு இல. 129 | 389.5மீ. | 6.0மீ. | எஸ். ஜீ. குணதிலக்க | 512000 வலய இல. 04 17.11.2012 |
| 30. | துண்டு இல. 78 - வீதி | துண்டு இல. 115-குடா ஏதண்ட வீதி கலகந்த வீதி | துண்டு இல. 80 | 57.0மீ. | 3.25மீ. | எஸ். ஜீ. குணதிலக்க | 512000 வலய இல. 04 17.11.2012 |
| 31. | துண்டு இல. 86 - வீதி | துண்டு இல. 115 - குடா ஏதண்ட வீதி கலகந்த வீதி | துண்டு இல. 84 | 84.5மீ. | 2.5மீ. | எஸ். ஜீ. குணதிலக்க | 512000 வலய இல. 04 17.11.2012 |
| 32. | துண்டு இல. 13, 15 அடி அகல வீதி | துண்டு இல. 6-ஹை வீதி | துண்டு இல. 6 | 170மீ. | 4.60மீ. | எம். டி. ஜே. பி. பெரேரா | இல. 8085 26.12.1984 |
| 33. | துண்டு இல. ஏ1ஏ வீதி | புகையிரத நிலைய வீதி | துண்டு இல. ஏ1சீ | 29.0மீ. | 3.6மீ. | கே. ஏ. ரூபசிங்ஹ | இல. 678/1991 09.11.1991 |
| 34. | துண்டு இல. பி 10 அடி அகல வீதி | புகையிரத நிலைய வீதி | துண்டு இல. பி | 50.0மீ. | 3.0மீ. | எம். டி. ஜே. பி. பெரேரா | இல. 5194 20.10.1979 |
| 35. | துண்டு இல. ஈ 12 அடி அகல வீதி | புகையிரத நிலைய வீதி | துண்டு இல. 2 12 அடி அகல வீதி | 73.50மீ. | 3.65மீ. | எம். டி. என். ரீ. பெரேரா | இல. 8503 03.09.2011 |

9-1012

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.